## 10

# விலைசெலுத்தும் நாள் ஒரு முக்கியமான நாள்

## (5:1–18)

*ஜார்ஜ் என்பவர் செய்தித்தாளில் ஒரு விளம்பரத்தைக் கண்டார். அவர் ஒருக்காலும் சொந்தமாக ஒரு கார் வைத்திருந்தது இல்லை. மாதாந்திரத் தவணைத் தொகை இவ்வளவு குறைவாய் இருக்கும் என்பதை நம்புவது அவருக்குக் கடினமாய் இருந்தது. மனத்தூண்டுதலின் செயல்பாட்டால் அவர் அதிக தகவல் பெறுவதற்காக அவர் விலையாளரைச் சந்தித்தார். புதிய கார்கள், அவர் கற்பனை செய்திருந்ததைக் காட்டிலும் அதிகம் மனம் கவருபவையாகக் காணப்பட்டன. அவர் ஒரு காரில் அமர்ந்து ஆடம் பரமான அதன் உள்வேலைப்பாட்டில் தனது கரங்களை வைத்துப் பார்த்தார். அவர் இயந்திரப்பொறிகளில் விளையாடி, மேற்கூரையை உயர்த்திப் பார்த்து, என்ஜினைக் கண்ணோக்கினார்.*

*விற்பனையாளர் ஒருவர் அவரை அணுகி, அதை ஓட்டிப்பார்க்க விருப்பமா என்று கேட்டார். ஜார்ஜ் தனது பழைய காருக்கு இன்னும் ஒரு ஆண்டு அளவாகப் பணம் செலுத்தித் தீர்த்தால் ஒழிய புதிய காருக்குப் பணம் செலுத்தத் தன்னால் இயலாது என்று கூறினார். அவர் வெறுமனே பார்த்துக் கொண்டு மாத்திரம் இருந்தார்.*

*என்ன கூறவேண்டும் என்பதை விற்பனையாளர் அறிந்திருந்தார். “இதை எடுத்து ஓட்டிப்பாருங்கள். நீங்கள் திரும்பி வரும்போது, உங்களுக்கு இதைப் பிடித்திருந்தால், எங்களால் என்ன செய்யக் கூடும் என்பதை நாங்கள் கண்டறிவோம். சிலவேளைகளில் உங்கள் பழைய காருக்குகூட நாங்கள் பணம் செலுத்தி, அந்தப் பணத்தை இந்தப் புதிய காருக்கு நீங்கள் செலுத்த வேண்டியதில் வரவு வைத்துக் கொள்வதுண்டு.”*

*முப்பது நிமிடங்களுக்குப் பின்பு, ஜார்ஜ் பிடிக்கப்பட்டார். அவர் முதலில் தமக்கு அந்தக் கார் தேவை என்று இணங்கினார். பின்பு, அவர் தமது பழைய காரில் இருந்த ஒரு சில உராய்வுக்கோடுகளுடன் அதைக் கண்ணோக்குகையில், அந்தப் புதிய காரைத் தாம் வாங்க வேண்டும் என்று முடிவு செய்தார். ஒரு புதிய காரைச் சொந்தமாகக் கொண்டிருந்தால் எப்படியிருக்கும் என்று ஒருமுறையாவது தாம் அறியவேண்டும் என்று விரும்பினார். செய்தித்தாளில் குறிப்பிடப்பட்டிருந்த விலையானது உதிர்ப்பாகங்கள் எதுவுமற்ற வெறும் காருக்கான விலையாக இருந்தது. எல்லா உதிரிப்பாகங்களின் விலையும் கூட்டப்பட்டதும், அதன் விலை எவ்வளவாக உயர்ந்துவிட்டது என்று ஜார்ஜ் வியப்புற்றார்.*

இவ்விதமான சூழ்நிலையை விற்பனையாளர் ஏற்கனவே கண்டிருந்தார். “நான் என்ன செய்வேன் என்பதை உங்களுக்குக் கூறுவேன். நான் உங்கள் பழைய காருக்கான விலையைக் கொடுத்து விடுவேன், அதற்கு இப்போது நீங்கள் செலுத்துகின்ற அதே தவணைத் தொகையை முப்பத்தி ஆறு மாதங்களுக்கு இந்தப் புதிய காருக்குச் செலுத்தும்படி ஏற்பாடு செய்வேன். பின்பு எஞ்சிய தொகையை நீங்கள் மறுபடி செலுத்தலாம், அப்போது கார் உங்களுடையதாகும்” என்று அவர் கூறினார். அது மிகவும் சுலபமானதாகவும் வேதனை குறைந்ததாகவும் ஒலித்தது. அவர் தமது பழைய காரை ஓட்ட முடிந்த அதே சுலபமான வழியில் புதிய காரைச் சொந்தமாக்க முடியும்.

இப்போது, மூன்று ஆண்டுகளுக்குப் பின்பு, ஜார்ஜ் (இரு) வேலைகளுக்கு இடையில் இருந்தார். அவரது மனைவி உடல் நலம் குன்றினார்,மருத்துவச் செலவுகள் குவிந்தன. அவர் மூன்று ஆண்டுகளாகத் தொடர்ந்து பணம் செலுத்தியிருந்தும், இன்னும் தான் செலுத்த வேண்டியிருந்த தொகை பற்றி மிகவும் திகைப்புற்றார். இப்போது அவர் தமது பழைய காரைத் திரும்பப் பெற்று கடனில் இருந்து விடுதலையாக விரும்பினார்.

விலைசெலுத்தும் நாள் எப்போதுமே வருகிறது! நமது சுகபோகத்தின் மனத்தூண்டுதலினுடைய வேளைகளில் பற்றுச் சீட்டுகள் வந்து சேருகிற போது, நாம் காயீனைப் போல அடிக்கடி முறையிடுகின்றோம், “எனக்கு இட்ட தண்டனை என்னால் சகிக்கமுடியாது” (ஆதி. 4:13). தவணைத் தொகையைச் செலுத்துதல் என்பது கடினமாக இருக்கும் என்பதை அறிந்திருந்தும், மனத்தூண்டுதலின் பேரில் செயல்பட்ட ஜார்ஜ் போலவே நாம் பாவம் செய்யும்படியான சோதனைக்குள் அமிழ்ந்து போகின்றோம். அதைப் பற்றி நினைத்துப்பார்க்க நாம் நிற்கின்றபோது, உடனடியான சுகபோகம் என்பதே பாவம் நிறைந்த வாழ்வு நமக்கு அளிக்கக் கூடிய ஒன்றாக உள்ளது. உடனடியான சந்தோஷத்தை அனுபவிக்க வேண்டும் என்ற நமது விருப்பமானது விளைவுகளைக் காணக்கூடாதபடி நமது கண்களைக் குருடாக்குகிறது. இன்னொரு பெண்ணுடன் தொடர்பு கொள்வதினால் தனது மனைவியுடன் கொண்டுள்ள உடன்படிக்கையை முறித்துப்போடும் ஒரு மனிதன், பிரிவின் வேதனையை, ஜீவனாம்சத்தை அல்லது தனது குழந்தைகளைப் பார்ப்பதற்கு மாதத்தில் ஒரு வாரக்கடைசி மட்டுமே தான் கொண்டிருக்கப் போவதை நினைப்பதில்லை. அவன் தனது மனைவியும் பிள்ளைகளும் அனுபவிக்கப் போகின்ற வேதனையைப் பற்றி நினைப்பதில்லை. அவன் அந்த நேரத்தின் உணர்வுக்கிளர்ச்சியை மாத்திரம் நினைக்கின்றான்.

சிலர் தாங்கள் விரும்பியபடி செய்வது என்பது தங்களைக் கவலைப்படுத்தாமல் இருக்கும்படிக்கு, தேவனைத் தங்கள் வாழ்வின் விளிம்புகளுக்கு வெளியே வைக்க முயற்சி செய்கின்றனர். அவர்கள் தங்கள் வாழ்வில் துன்பம் வருகிறபோது என்ன நடக்கும், அங்கு தங்களுக்கு உதவ தேவன் இருக்க மாட்டாரே என்பதைப் பற்றி நினைப்பதில்லை. அவர்கள் மாம்சத்தில் தற்போது கிடைக்கும் சுகபோகத்தை மட்டும் நினைக்கின்றனர்.

தேவபக்தியுள்ளவர், தாமதமாய் வருகிற பலன்களுக்காகத் தமது வாழ்வின் முறைக்குக் கிடைக்கின்ற உடனடியான விளைவுகளை ஏற்றுக்கொள் கின்றார், தேவபக்தியற்றவர் உடனடியான பலன்களை ஏற்றுக் கொண்டு பிற்பாடு வரும் விளைவுகளை கவனியாமல் இருக்கின்றார் என்பதே இவ்விரு வகையினருக்கும் இடையிலான அடிப்படை வேறுபாடாக இருக்கிறது. இங்கே இப்போது என்பதற்காக வாழ்கின்ற நபர், "ஏதேனும் நடந்தது என்றால், அப்போது நான் அதைப் பற்றி கவலைப்பட்டுக் கொள்வேன்" என்று நினைக்கின்றார். ஆனால், "என்றால்" என்பதல்ல "போது" என்பதே இவ்விடத்தின் வார்த்தையாக உள்ளது. விளைவுகள் நிச்சயமாகவே வரும். ஜாக்கிரதையற்ற வாழ்வானது எப்போதுமே ஒரு உயர்ந்த விலைப்பட்டியுடன் வருகிறது.ஊதியம் பெறும் நாள் என்பது, "இப்போது வாங்குங்கள், பிற்பாடு பணம் செலுத்துங்கள்" என்ற வாழ்வுப்பாணியின் சந்தோஷத்தை அழித்துப் போடுகிறது.

விலை செலுத்தும் நாள் யூதாவுக்கு வந்தபோது என்ன நடந்தது என்பதை புலம்பல் 5ம் அதிகாரம் கூறுகிறது. மக்கள் பல ஆண்டுகளாகத் தங்களுக்குப் பிரியமான வகையில் வாழ்ந்திருந்தனர். கடைசியில், அதற்காக விலைசெலுத்தும் நாள் வந்திருந்தது. அவர்கள் எவ்வளவாகக் கடனைக் குவித்து வைத்து இருந்தனர்! என்ன ஒரு விலைப்பட்டி!

## நற்பெயர் இழப்பு

"கர்த்தாவே, எங்களுக்கு நேரிட்டதை நினைத்தருளும், எங்கள் நிந்தையை நோக்கிப்பாரும்" (5:1). நிந்தை! கனவீனம்! வெட்கம்! வெட்கம் என்பது செருக்குக் கொண்ட மக்கள் சுமப்பதற்கு மிகவும் கடினமான விளைவாக உள்ளது. வெட்கக் கேட்டில் இருந்து தப்பிக்க மனிதர்கள் எதை வேண்டுமென்றாலும் செய்வார்கள். சிலர் தங்கள் தவறுகளை ஒப்புக்கொள்ளுதல் என்ற வெட்கக் கேட்டைத் தவிர்ப்பதற்கு மறுப்பில் வாழுகின்றனர். மற்றவர்கள் தங்கள் பாவங்களை மறைப்பதற்குப் பொய்கூறி, ஏமாற்றி, திருடி, கொலை செய்து, தவறுக்குமேல் தவறாகச் செய்து குவிக்கின்றனர். இவற்றில் எதுவும் எவரொருவரையும் குற்றம் குறைந்தவராக்குவதில்லை; இது அவர்களின் செய்கைகளை மற்றவர் களிடத்தில் இருந்து மறைக்கவும், அவர்கள் தங்கள் வெட்கக் கேடான தலைகளை உயர்த்த அனுமதிக்கவும் மாத்திரம் செய்கிறது. இருப்பினும், தேவன் ஒருவரே விலையை நிர்ணயிக்கிறவராய் இருக்கின்றனர். அவருக்கு மறைவானது ஒன்றும் இல்லை. சாலொமோன், "ஒவ்வொரு கிரியையையும், அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும், நன்மையானாலும் தீமையானா லும், தேவன் நியாயத்திலே கொண்டுவருவார்" என்று கூறினார் (பிர. 12:14).

புலம்பல் 5:12, 14ல், தீர்க்கதரிசி தமது கவனத்தை, நற்பெயரின் இழப்புக்கான மற்ற இரு குறிப்புகள் மீது திருப்பினார்: "முதியோரின் முகங்கள் மதிக்கப்படவில்லை" மற்றும் "முதியோர்கள் வாசல்களில் உட்காருகிறதும், ... நின்றுபோயிற்று." சமூகத்தின் முதியவர்கள், மார்க்கம் மற்றும் சட்டம் சார்ந்த விஷயம் ஆகிய இரண்டிலும் மக்களை நடத்துகின்ற

வர்களாய் இருந்தனர். இம்மனிதர்கள் சாதாரணமாக உயர்வாக மதிக்கப்பட்டு இருந்தனர். அவர்கள் வளர்ந்து கொண்டிருந்த இளைஞர்களுக்கு முன்மாதிரியாக இருந்தனர். இவர்கள் சமுதாயத்தில் ஆலோசனையாளர்களாகவும் பராமரிப்பு தருபவர்களாகவும் இருந்தனர், இருப்பினும் இவர்கள் மக்களிடத்தில் மரியாதையை இழந்தனர் மற்றும் நாட்டின் வீழ்ச்சிக்குப் பங்களித்தவர்கள் ஆயினர். இவர்களின் நற்பெயர்கள் கறைபடிந்தன.

நற்பெயரைக் காட்டிலும் ஒரு நபருக்கு அதிகம் மதிப்பு வாய்ந்தது வேறு எதுவும் இருப்பதில்லை. “பரிமளதைலத்தைப்பார்க்கிலும் நற்கீர்த்தியும், ... நல்லது” (பிர. 7:1). எரேமியாவின் நாட்களில், விலையுயர்ந்த தைலம் என்பது நேர்த்தியான பொன்னைக் காட்டிலும் அதிகம் மதிப்பு வாய்ந்ததாக இருந்தது; செல்வந்தர்கள் மட்டுமே அதை வாங்க முடியும். இருப்பினும், சாலொமோனின் கூற்றுப்படி, நற்பெயர் கொண்ட ஒரு மனிதன், நேர்த்தியான பொன் அல்லது விலையுயர்ந்த தைலம் ஆகியவற்றைக் கொண்டிருந்த மனிதனை விட அதிகம் செல்வந்தன் என்று கருதப்பட்டான். நற்பெயரானது ஒருவருக்கு நன்கு பயன்படுகிறது மற்றும் அவர் இறந்த பின்பும் அது வாழ்கிறது. பாவம் நிறைந்த வாழ்வு நடையினால் நற்பெயரைக் கெடுத்துக் கொள்ளுதல் என்பது எல்லா இழப்புக்களிலும் மகா பெரியதாக உள்ளது.

## சுதந்தரவீதம் இழப்பு

“எங்கள் சுதந்திரம் அந்நியர் வசமாகவும், எங்கள் வீடுகள் புறதேசத்தார் வசமாகவும் தாண்டிப்போயின. திக்கற்றவர்களானோம், தகப்பன் இல்லை, எங்கள் தாய்கள் விதவைகளைப்போல இருக்கிறார்கள்” (5:2, 3). யூதாவின் சுதந்தரம் என்பது பரிசுத்தமானதாக, தேவனால் ஒப்புவிக்கப்பட்டதாக கருதப்பட்டது. இஸ்ரவேல் மக்களுக்கு நிலங்களைத் தேவனே கொடுத்திருந்தார், ஒவ்வொரு குடும்பமும் அதைத் தனது அடுத்த தலைமுறைக்கு வைத்துச் சென்றது - இது முன்னோர்களிடம் இருந்து கிடைக்கப்பெற்ற கொடையென்று அல்ல, ஆனால் தேவனிடமிருந்து கிடைக்கப்பெற்ற கொடையென்றே நினைக்கப்பட்டது. இப்போது அது போய்விட்டது, அது தேவனை மதிக்காத அந்நியர்களாலும் பரதேசிகளாலும் எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தது!

இஸ்ரவேல் சமூகத்தில் விதவைகளும் திக்கற்றவர்களுமே பெரும்பாலும் அதிக பரிதாபத்திற்கு உரிய மக்களாக இருந்தனர். அவர்கள் கூலியாட்களாகவோ அல்லது அடிமைகளாகவோ மாத்திரமே பிழைக்க முடிந்தது. கணவன் இல்லாத ஒரு விதவை சுதந்திரவீதம் எதையும் கொண்டிருந்ததில்லை.பெற்றோர் இல்லாத அனாதைகள் சுதந்திரவீதம் எதையும் கொண்டிருந்ததில்லை. யூதா நாடானது, விதவைகள் மற்றும் திக்கற்றவர்களின் நிலையிலேயே இருந்தது. அவர்கள் தங்கள் பிதாவை விட்டுச் சென்றிருந்தனர்; அவர்கள் இந்த உலகத்தின் உரிமையாளருக்குத் தங்கள் முதுகைத் திருப்பிக் காட்டியிருந்தனர், மற்றும் அவர்களை அவர்

*சுதந்தரத்தில் இருந்து வெளியேற்றியிருந்தார். எல்லாவற்றையும் உரிமைகொண்டுள்ள ஒருவரை நாம் கைவிட்டால், நாமும்கூட நமது சுதந்திரவீதத்தை இழந்துபோவோம்.*

## தனிப்பட்ட தேவைகள், உரிமைகள் மற்றும் விடுதலைகள் இழப்பு

*அடுத்த பகுதியில் எரேமியா, அந்நியநாடுகளுக்குக் கீழ்ப்பட்டு வாழ்தலின் பரிதாபமான சித்தரிப்பை முன்வைத்தார்:*

> *எங்கள் தண்ணீரைப் பணத்துக்கு வாங்கிக் குடிக்கிறோம், எங்கள் விறகு விலைக்கிரயமாய் வருகிறது. பாரஞ்சுமந்து எங்கள் கழுத்து நோகிறது, நாங்கள் உழைக்கிறோம், எங்களுக்கு இளைப்பாறுதல் இல்லை. அப்பத்தால் திருப்தியாகும்படி எகிப்தியருக்கும் அசீரியருக்கும் எங்களைக் கையளித்தோம். ... அடிமைகள் எங்களை ஆளுகிறார்கள், எங்களை அவர்கள் கையிலிருந்து விடுவிப்பாரில்லை. வனாந்தரத்தில் இருக்கிற பட்டயத்தினால் பிராணமோசத்துக்கு ஏதுவானவர்களாய் எங்கள் அப்பத்தைத் தேடுகிறோம். பஞ்சத்தின் கொடுமையினால் எங்கள் தோல் அடுப்பங்கரையைப்போல் கறுத்துப் போயிற்று. சீயோனில் இருந்த ஸ்திரீகளையும் யூதா பட்டணங்களில் இருந்த கன்னிகைகளையும் அவமானப்படுத்தினார்கள். பிரபுக் களுடைய கைகளை அவர்கள் கட்டி, அவர்களை ஏறத்தூக்கினார்கள் (5:4-12அ).*

*விறகு மற்றும் தண்ணீர் ஆகியவை வழக்கமாக இலவசமாய் எடுத்துக் கொள்ளும்படியாக இருந்த, இரண்டு அடிப்படைத் தேவைகளாகும். ஒவ்வொரு சமுதாயமும் தனது மக்கள் தங்களுக்குத் தண்ணீரை எடுத்துக் கொள்வதற்கான நீரோடைகள் அல்லது கிணறுகளையும், விறகுகளை இலவசமாய்ச் சேகரிப்பதற்கான மரங்கள் மற்றும் புதர்ச்செடிகள் ஆகியவற்றையும் தத்தமது நிலப்பகுதியில் கொண்டுள்ளன. நகரம் பிடிபட்டபோது, தண்ணீர் அல்லது விறகு கொண்டுவரும்படிக்கு எவரொருவரும் உள்ளேயோ அல்லது வெளியேயோ அனு மதிக்கப்படவில்லை. இந்த அத்தியாவசியப் பொருட்களுக்குப் பஞ்சம் ஏற்பட்டபோது, இவைகளுக்கு உயர்ந்த விலை நிர்ணயிக்கப்பட்டது. மக்கள் ஒரு உணவைத் தயாரிப்பதற்குப் போதுமான தண்ணீரையும் விறகையும் பெறுவதற்குத் தங்களிடத்தில் இருந்த மாபெரும் பொக்கிஷங்களைக்கூட விற்றனர்.*

*யூதாவின் மக்கள் உயிர்வாழ்வதற்குப் போதுமான அப்பம் பெறுவதற்காக, அந்நியரும் புறதெய்வவணக்கத்தாருமாய் இருந்த நாடுகளிடத்தில் அடைமானமாயினர். அவர்கள் அடிமைகளுக்கு அடிமை கள் ஆயினர். அவர்களின் பெண்கள் தேவனுடைய நகரத்தில் கற்பழிக்கப் பட்டு தவறாகப் பயன்படுத்தப்பட்டனர். ஆட்சியாளர்களின் குமாரர்கள் துன்புறுத்தப்பட்டு கொல்லப்பட்டனர். அவர்களின் உடல்கள் பசியி*

னிமித்தம் உண்டான வெம்மையினால் எரிக்கப்பட்டன. இளைப் பாறுதலோ விடுவிப்பிற்கான நம்பிக்கையோ இல்லாதிருந்தது.

இது, இவ்வேளையில் யூதாவின் மக்களுடைய உண்மையான சரீரப் பிரகாரமான நிலையை விவரிக்கையில், தொடர்ச்சியான பாவத்தினால் கொண்டுவரப்பட்ட ஆவிக்குரிய இழப்பு பற்றிய அளவையியல் விவரிப் பாகவும் இருந்தது. இது பாவத்தினால் தேவனிடத்திலிருந்து பிரிக்கப்பட்ட ஆத்துமாவைப் பற்றி விவரிக்கிறது. அவர்களின் ஆவிக்குரிய நிலைமையை எரேமியா கவனத்துடன் விவரித்தார். செலுத்துதல், கிரயம், இளைப்படைதல், எரிதல், மற்றும் நிலைதடுமாறுதல் போன்ற சொற்கள், பாவத்தைத் தொடர்ந்து செய்பவர்களுக்கு அது என்ன செய்கிறது என்பது பற்றிய வனப்பற்ற ஆனால் அளவையியல்ரீதியான சித்தரிப்புக்கு வண்ணந்தீட்டியது.

## பிள்ளைகள் இழப்பு

எரேமியாவின் காலத்தில் இருந்த சந்ததியார் தங்களுக்கு முன்பிருந்த சந்ததியாரின் பாவங்களினால் துன்புற்றனர் என்பதை அவர் ஒப்புக்கொண்டார்:

> எங்கள் பிதாக்கள் பாவஞ்செய்து மாண்டுபோனார்கள், நாங்கள் அவர்களுடைய அக்கிரமங்களைச் சுமக்கிறோம் (5:7).
>
> வாலிபரை ஏந்திரம் அரைக்கக்கொண்டுபோகிறார்கள், இளைஞர் விறகுசுமந்து இடறிவிழுகிறார்கள் (5:13).
>
> முதியோர்கள் வாசல்களில் உட்காருகிறதும், வாலிபர் கின்னரங்களை வாசிக்கிறதும் நின்றுபோயிற்று (5:14).

தேவபக்தியற்ற வாழ்வுப்பாணியைத் தேர்ந்துகொண்ட மக்கள், தங்கள் தேர்ந்து கொள்ளுதலின் செயல்வலிவு தங்கள் அன்பார்ந்தவர்கள்மேல் இருக்கும் என்பதை நினைக்காதிருக்கின்றனர். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்காகக் கட்டியெழுப்பிய அநீதியின் அறவைச்சாலையில் அந்தப்பிள்ளைகள் மாவரைக்கும்படி அழிவுபடுதல் என்பது தவிர்க்க இயலாததாக உள்ளது. அவர்கள் தங்கள் பெற்றோர் குவித்து வைத்த அக்கிரமத்தின் கனத்த பாரத்தின்கீழ் தடுமாறுவார்கள்.

கடினமான சூழ்நிலையில் வளர்க்கப்பட்டவர்கள் சிலவேளைகளில், தங்கள் பிள்ளைகளின் வாழ்வு தங்களுடையது போல் கடினமாய் இராதபடி பார்த்துக்கொள்ள வேண்டும் என்று சூளுரைத்துக் கொள்கின்றனர். உள்ளுணர்வு என்பது உண்மையான அக்கறையை வினக்கப்படுத்திய போதிலும், நமது பிள்ளைகள் தேவனைப் பற்றிய அறிவு இல்லாதவர்களாய் ஒருபோதும் இருக்கலாகாது என்பது அதிகம் மாண்புமிகுந்த பிரதிக் கினையாக உள்ளது. பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை, வளமை, முக்கியத்துவம் வாய்ந்த இடம் மற்றும் அதிகாரம் என்ற பலிபீடங்களில்

*பலியிடுகின்றபோது, அதைப் பற்றிப் பாடுவதற்குப் பிள்ளைகள் அதிகமாக எதையும் கொண்டிருப்பதில்லை.*

*நமது வாழ்வுப்பாணிகள் என்பது நமது சொந்த விஷயம் என்றும் அவை நம்மைத் தவிர வேறு ஒருவரையும் பாதிக்காது என்றும் நினைப்பதற்கு நாம் விரும்புவோம். அது ஒருக்காலும் அவ்வாறு இருப்பதில்லை! நாம் மிகவும் அன்புசெலுத்துகின்ற நமது பிள்ளைகள்தான் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டவர்களாய் இருப்பார்கள்.*

## *சந்தோஷம் இழப்பு*

*யூதாவின் மக்கள் தங்கள் மற்ற இழப்புக்களுடன் கூட, சந்தோஷத்தின் முடிவையும் கண்டனர்:*

> *எங்கள் இருதயத்தின் களிகூருதல் ஒழிந்துபோயிற்று, எங்கள் சந்தோஷம் துக்கமாய் மாறிற்று. எங்கள் தலையிலிருந்து கிரீடம் விழுந்தது, ஐயோ! நாங்கள் பாவஞ்செய்தோமே. அதினால் எங்கள் இருதயம் பலட்சயமாயிற்று, அதினால் எங்கள் கண்கள் இருண்டு போயின. பாழாய்க்கிடக்கிற சீயோன் மலையின்மேல் நரிகள் ஓடித்திரிகிறது (5:15-18).*

*சந்தோஷம் என்பது கேளிக்கையைப் போன்றது அல்ல. கேளிக்கை என்பது புறம்பானதாகவும் தற்காலிகமானதாகவும் உள்ளது, இது ஒரு பொழுதுபோக்கு நிகழ்ச்சி அல்லது செயல் நடைபெறும்போது மாத்திரம் உள்ளதாகும். இதற்கு நேர்மாறாக, சந்தோஷம் என்பது இருதயத்தின் உள்ளான நிலைமையாகவும், நம்முடன் எப்போதும் இருந்து நிலைவரப்படுவதாகவும் உள்ளது. சந்தோஷம் என்பது ஒரு கேளிக்கை அனுபவத்தை உயர்த்த முடியும், ஆனால் கேளிக்கை என்பது சந்தோஷத்தைக் கொண்டுவர இயலாது.*

*உண்மையான சந்தோஷம் என்பது உயர்வான நோக்கத்தினால் - மேன்மைப்படுத்தப்பட்ட அடைவு இலக்கினால், தேவனுடைய அறிவினால் தரப்பட்ட இலக்கினால்- உண்டாக்கப்படுகிறது. சந்தோஷம் என்பது -நீங்கள் தேவனுடையவர்கள் மற்றும் தேவன் உங்களுடையவர் என்று அறிந்து - தேவனுடன் கொண்டுள்ள நெருக்கமான உறவாக உள்ளது. தேவனுடைய நிலையான பிரசன்னத்தில் வாழ்கின்றவரிடத்திலிருந்து இதை எடுத்துப்போட இயலாது, அல்லது இது தேவனுடைய நிலையான பிரசன்னத்தில் இல்லாதவருக்குக் கொடுக்கப்படவும் இயலாது. யூதாவின் மக்கள் தங்கள் நோக்கத்தைப் பற்றிய கண்ணோக்கை இழந்தனர்; அவர்கள் தேவனிடமிருந்து பிரிக்கப்பட்டவர்களாகி, தங்கள் சந்தோஷத்தை இழந்திருந்தனர். அவர்கள் தேவனுடனான தங்கள் உறவை வளப்படுத்துவதில் தவறியிருந்தனர்.*

*அவர்கள் சந்தோஷத்தை இழக்கக் காரணமாய் இருந்தது எது என்பதில் எரேமியா மிகவும் தெளிவாயிருந்தார்: "ஐயோ! நாங்கள் பாவஞ்செய்தோமே!" தேவன் பரிசுத்தராக இருக்கின்றார்! அவர் பாவம் உள்ள*

*இடத்தில் நிலைத்திருக்க இயலாது. வேண்டுமென்றே தொடர்ந்து செய்யப்படுகிற பாவத்தின் பிரசன்னத்தில் வாசம் செய்தல் என்பது அவரது இயல்புக்கு நேர்மாறானதாக உள்ளது. அவர் பரிசுத்தராய் இருக்கிறது போல நாமும் பரிசுத்தராய் இருக்க வேண்டும் என்பதற்காகவே அவர் நம்மை அழைத்திருக்கின்றார் (1 பேது. 1:16).*

## *செய்தி என்ன?*

*எரேமியாவின் நாட்களில் இருந்து (இதுவரையிலும்கூட) மக்கள் அதிக மாய் மாற்றம் அடைந்திருக்கவில்லை, நாம் மாற்றம் அடைந்திருக்கின் றோமா? நமது இயல்பும், நாம் பாவத்திற்குச் சாய்தலும் இன்னமும் அதேபோல் உள்ளது. பாவத்தின் விளைவுகளும் இன்னமும் அதேபோல் உள்ளன.*

*வேதாகமம் முழுவதிலும், பாவத்தின் விளைவுகள் என்பவை, சாத்தியமான அளவுக்கு மிகவும் வரைவியல்ரீதியாக விவரிக்கப்பட்டுள்ளன. அந்தச் செய்தியை நாம் பெறும்படி தேவன் விரும்புகிறார்!*

*தீர்க்கதரிசிகளின் காலத்தில் பாவத்தைப் பற்றிப் பேசுதல் என்பது புகழற்றதாக இருந்தது, மற்றும் இப்போதும் அது புகழற்றதாகவே உள்ளது. மக்கள் தங்கள் அழகின்மையை எதிர்கொள்ளவோ அல்லது அதை ஒப்புக்கொள்ளவோ விரும்புவதில்லை. எரேமியாவினால் தீட்டப்பட்ட சித்திரமானது பாவத்தின் இயல்பைப் பற்றி நாம் அறியத் தேவையான நான்கு உண்மைகளை வெளிப்படுத்துகிறது.*

*(1) பாவம் வஞ்சிக்கிறது. யூதாவிலும் எருசலேமிலும் இருந்த மக்கள் தங்கள் மீது அப்படிப்பட்ட அழிவை வேண்டுமென்றே வரவழைத்துக் கொண்டிருக்க மாட்டார்கள். பாவத்தைப் பற்றி அவர்களுக்கு கூறப்பட்டிருந்தாலும், அவர்கள் பாவத்தின் வஞ்சனையினால் பார்வை பறிக்கப்பட்டு இருதயக் கடினம் அடைந்திருந்தனர். அதனால்தான் எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், “உங்களில் ஒருவனாகிலும் பாவத்தின் வஞ்சனையினாலே கடினப்பட்டுப் போகாதபடிக்கு, இன்று என்னப்படுமளவும் நாடோறும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லுங்கள்” என்று நமக்கு அறிவுறுத்தல் கொடுத்தார் (எபி. 3:13). சரியானது மற்றும் தவறானது பற்றிய நமது புறிந்து கொள்ளுதலைக் குழப்பம் அடையச் செய்வதின்மூலம் பாவம் நம்மை வஞ்சிக்கிறது. பாவத்தின் வஞ்சனை பற்றி எரேமியா கொடுக்கும் விளக்கத்துடன் இந்த உலகம் கொடுக்கும் விளக்கத்தை ஒப்பிடுகையில், இது (உலகம் கொடுக்கும் விளக்கம்) மிகவும் மென்மையானதாக உள்ளது.*

*1 யோவா. 3:4, “பாவஞ்செய்கிற எவனும் நியாயப்பிரமாணத்தை மீறுகிறான். நியாயப்பிரமாணத்தை மீறுகிறதே பாவம்” என்று கூறுகிறது. நியாயப்பிரமாணத்தை மீறுதல் என்பது குறிப்பாகத் தேவனுடைய பிரமாணத்தை அல்லது சித்தத்தை மீறி நடத்தலை அர்த்தப்படுகிறது. பாவம் என்றால் என்ன என்பதை அறிவதற்கு அதைப் பற்றித் தேவன் என்ன கூறுகின்றார் என்பதை நாம் அறிந்தாக வேண்டும். சரியானது மற்றும்*

*தவறானது என்பது பற்றிய தேவனுடைய தர அளவையை மீறுதல் என்பது பாவமாக உள்ளது. 1 யோவா. 5:17, "அநீதியெல்லாம் பாவந்தான்" என்று கூறுகிறது. நடக்கைக்கான தேவனுடைய தர அளவையின்படி வாழத் தவறுதல் என்பது அநீதியாக உள்ளது.*

*நாம் பாவம் செய்திருப்பதாக ஒப்புக்கொண்டாலும், விளைவுகள் கடுமையானதாயிராது அல்லது அவற்றிலிருந்து நாம் எப்படியாவது தப்பிவிடலாம் என்று நினைக்கும்படி சுலபமாக வஞ்சிக்கப்பட்டு விடுகின்றோம். அதுவே சாத்தான் ஏதேன் தோட்டத்தில் ஏவாளிடத்தில் கூறிய முதல் பொய்யாயிருந்தது (ஆதி. 3:4, 5). தேவன், "உங்கள் பாவம் உங்களைத் தொடர்ந்துபிடிக்கும் என்று நிச்சயமாய் அறியுங்கள்" என்று கூறியிருக்கின்றார் (எண். 32:23).*

*(2) பாவம் (நம்மை) தேவனிடத்தில் இருந்து பிரிக்கிறது. ஏசா. 59:1, 2 பின்வருமாறு கூறுகிறது:*

> *இதோ, இரட்சிக்கக்கூடாதபடிக்குக் கர்த்தருடைய கை குறுகிப்போகவுமில்லை, கேட்கக்கூடாதபடிக்கு அவருடைய செவி மந்தமாகவுமில்லை. உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது, உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவிகொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது.*

*தேவனால் தனித்து விடப்பட்ட ஆத்துமாவை எந்த வார்த்தையினாலும் விவரிக்க இயலாது. ஏதேன் தோட்டத்திலிருந்து பிரிக்கப்படுதல் என்பதே ஆதாமுடைய பாவத்தின் மாபெரும் விளைவாக இருந்தது, ஏனென்றால் அது தேவனுடைய பிரசன்னத்தில் இருந்து பிரிதல் என்று அர்த்தப்பட்டது. யூதா, தேவனால் தனித்து விடப்பட்ட நாடு என்ற வகையில் அதன் விளைவுகளில் துயரப்பட்டது. ரோமர் 1ல், தேவனைப் பற்றி அறியாதவர்களைப் பற்றி விவரிக்கையில் பவுல், "தேவன் அவர்களை ... ஒப்புக்கொடுத்தார்" என்று மூன்று முறை கூறினார் (வசனங்கள் 24, 26, 28). தேவனிடத்தில் இருந்து பிரிந்தவர்கள் பற்றிய மிகவும் வரைவளவான விவரிப்பானது இயேசுவினால், மத். 25:31-46ல் உள்ள உவமையில் தரப்பட்டது. வசனம் 41, "சபிக்கப்பட்டவர்களே, என்னைவிட்டு, பிசாசுக் காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள்" என்று கூறுகிறது.*

*பாவம் மாத்திரமே ஒரு ஆத்துமாவை நித்தியத்திற்கும் அழிக்கக்கூடிய ஒரே விஷயமாக உள்ளது. மரணம் என்பது, பாவத்தின் கடைசியான மற்றும் நிறைவான கிரயமாக உள்ளது (ரோம. 6:23). உடல் ரீதியான மரணம் என்பது, உடலில் இருந்து ஆவி பிரிதல் என்பதாக உள்ளது (யாக். 2:26); ஆவிக்குரிய மரணம் என்பது, ஆத்துமா தேவனிடத்தில் இருந்து பிரிதல் என்பதாக உள்ளது. நாம் உடலுக்குரிய மரணத்திலிருந்து தப்பிக்க இயலாது, ஆனால் தேவனிடத்தில் இருந்து பிரிதல் என்ற மரணத்தில் இருந்து தப்பிக்க அவர் நமக்கு வழியை ஏற்படுத்தியிருக்கின்றார்.*

*(3) பாவம் அடிமைப்படுத்துகிறது. பவுல், "மரணத்துக்கேதுவான பாவத்துக்கானாலும், நீதிக்கேதுவான கீழ்ப்படிதலுக்கானாலும், எதற்குக் கீழ்ப்படியும்படி உங்களை அடிமைகளாக ஒப்புக்கொடுக்கிறீர்களோ, அதற்கே கீழ்ப்படிகிற அடிமைகளாயிருக்கிறீர்களென்று அறியீர்களா?" என்று எழுதினார் (ரோம. 6:16). நாம் யாவருமே ஏதாவது ஒன்றிற்கு ஊழியம் செய்கின்றோம். இங்கும் இதற்குப்பின்பும் நமது வாழ்வின் தகுதியானது, நமது எஜமானர்களின் பண்பைச் சார்ந்ததாக இருக்கும். பாவம் என்பது ஒரு அற்பமான எஜமானாக, ஒரு இரக்கமற்ற சர்வாதிகாரியாக இருக்கிறது.*

*(4) பாவம் மோசம்போக்குகிறது, கன்டனம் பண்ணுகிறது, கடைசியில் அழித்துப் போடுகிறது. பவுல் எபேசுவில் இருந்த கிறிஸ்தவர்களை, "அந்தப்படி,முந்தின நடக்கைக்குறிய மோசம்போக்கும் இச்சைகளாலே கெட்டுப்போகிற பழைய மனுஷனை நீங்கள் களைந்துபோடு(ங்கள்)" என்று வற்புறுத்தினார் (எபே. 4:22). பாவம் என்பது, படிப்படியாக அழிக்கிறது மற்றும் அது ஆத்துமாவையும் உடலையும் படிப்படியாக உருக் குலைக்கிறது. பாவம் நிறைந்த வாழ்வுப்பாணி என்பது புதைமணல் போன்றதாக உள்ளது: நீங்கள் எவ்வளவு நீண்டகாலம் அதில் இருக்கின்றீர்களோ, அவ்வளவுக்கு அதில் இருந்து வெளியேறுதல் என்பது கடினமானதாக உள்ளது.*

*இருப்பினும் உங்களால் அதிலிருந்து வெளியேற முடியும்! "பாவத்தின் சம்பளம் மரணம், தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்" (ரோம. 6:23). நமக்கு ஜீவனைக் கொண்டு வருவதற்காக இயேசுவின் மரணமானது நமது பாவத்திற்கான கிரயத்தைச் செலுத்திற்று. ஆவிக்குரிய மரணம் என்பது தேவனிடத்தில் இருந்து பிரிதல் என்றிருக்குமென்றால், ஆவிக்குரிய வாழ்வு என்பது தேவனுடன் ஐக்கியமாயிருத்தல் என்பதாக உள்ளது. நம்மை தேவனுடன் நிரந்தரமாக ஒன்றித்திருக்கச் செய்வதற்காக இயேசு தேவனிடத்தில் இருந்து தற்காலிகமாகப் பிரிந்திருந்தார். எபேசியர் 4ல் பவுல், பழைய மனுஷனைக் களைந்து போடுதல் பற்றிப் பேசியபின்பு, "உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகிய, மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக் கொள்ளுங்கள்" என்று தொடர்ந்து கூறினார் (வசனங்கள் 23, 24).*

*உங்கள் வாழ்வை பாவம் கட்டுப்படுத்துவதினாலும், அதன் வஞ்சனை யான மற்றும் அழிக்கக்கூடிய இச்சைகளுக்கு அடிமைப்பட்டிருப் பதினாலும் நீங்கள் களைப்புற்றிருந்தால், நீங்கள் உங்கள் வாழ்க்கைக்கான நோக்கத்தை மாற்ற முடியும். நீங்கள் பாவச் சேற்றில் அமிழ்த்தப் பட்டதினால் களைப்புற்று, பரிசுத்த தன்மையின் சந்தோஷத்தை அனு பவிக்க விரும்பினால், மோசம்போக்கும் வாழ்வின் விலங்குகளை உடைக்கும் வல்லமையை அருளுகின்ற இயேசுகிறிஸ்துவை உரிமை கோருங்கள். நீங்கள் தேவனுடைய சாயலாக்கப்பட்ட ஒரு புதிய நபராக முடியும். நீங்கள் கிறிஸ்துவின்மீது கொண்டுள்ள அன்பையும் அவரை*

உங்கள்வாழ்வின் ஆண்டவராக்குவதற்கான உங்கள் மனவிருப்பத்தையும் சுட்டிக்காண்பிக்க அவருக்குள் ஒருக்காலும் முழுக்காட்டப்படாதிருந்தால், அதை நீங்கள் இன்றே செய்ய வேண்டும்.

ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இயேசு மனவிருப்பத்துடன் சிலுவைக்குச் சென்ற போதே, நமது பாவங்களுக்கு விலைசெலுத்தும் நாளானது வந்திருந்தது. விலகித்திரிந்த மக்களினால் குவிக்கப் பட்டிருந்த பாவக்கடன்களுக்கு விலைசெலுத்துவதற்காக அவர் அங்கு சென்றார். அவரைப் பின்பற்றவிருந்த எல்லா மக்களுடைய பாவக்கடன்களையும் முன்னதாகவே செலுத்தித்தீர்க்க அவர் அவ்வாறு சென்றார். நீங்கள் உங்கள் பாவங்களுக்காக இயேசு ஏற்கனவே செலுத்தியுள்ள கிரயத்தை ஏற்றுக் கொள்ளமுடியும் அல்லது நீங்களாகவே அதற்குரிய விலையைச் செலுத்தக் கூடும். நீங்கள் விலையைச் செலுத்துவதாயிருந்தால், பரலோகத்தைத் தவறவிட்டு விடுவீர்கள். உங்களுக்காக இயேசு செலுத்திய கிரயத்தை நீங்கள் ஏற்றுக்கொண்டால், எவரொருவருக்கும் அளிக்கப்பட்டவற்றிலேயே மாபெரும் கொடையை நீங்கள் பெற்றுக்கொள்ள முடியும்: அது நித்திய ஜீவன் என்ற கொடையே ஆகும். இன்றைய நாளை நீங்கள் விலைசெலுத்தும் நாளாக்குங்கள் - இது உங்கள் பாவங்களுக்காக விலைசெலுத்தக் கிறிஸ்துவை அனுமதிக்கும் நாளாகட்டும் மற்றும் உங்கள் வாழ்வின் மாபெரும் கொடையை ஏற்றுக்கொள்ளுங்கள்.